பதிவுஎண். M. 6331 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 19] சென்னை: மார்கழி 8 (23—12—71) வியாழன் வெளியூர்: மார்கழி 9 (24—12—71) வெள்ளி [இதழ்: 160

இரஷ்யாவுடன் போர் தொடுக்கச் செஞ்சீனா தயாராகிறதா?

டோக்கியோ, டிச. 23—

இரஷ்யாவுடன் போர் நடத்துவதற்கு, சீனா தன்னைத் தயார்படுத்திவருவதாக, டோக்கியோ கவர்னர் ரியோகிசி மினேபி செய்தியாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

இவர் கடந்த மாதம் சீனாவுக்குச் சென்று சூ-யென்-லாயைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

பாகிஸ்தானில் மக்களாட்சி மலருமா?

சீனாவும்—அமெரிக்காவும் பூட்டோவுக்கு உதவுமா?

வல்லரசுகளின் போக்கை நிர்ணயிக்கும் கட்டம் நெருங்குகிறது

புதுடில்லி, டிச. 23—

கிழக்கு வங்கம் கைநழுவிவிட்டுப் போன ஒன்று என்பதை, பாகிஸ்தான் அதிபர் பூட்டோ இன்னமும் உணராமலிருப்பது விசித்திரமிக்க ஒன்றாகும்.

கிழக்கு வங்க மக்கள்மீது இப்போது அவர் காட்டிவரும் அக்கறையும், 'கடந்ததையெல்லாம் மறப்போம்—மன்னிப்போம்' என்று அவர் கூறும் 'நாடக பாணி'ப் பேச்சும், வங்க தேசம் சுதந்தரமாகத் திகழும் இந்த நேரத்தில் காலம் கடந்ததாகும்.

பூட்டோவின் நடவடிக்கைகளை இந்தியா உன்னிப்பாகக் கவனித்துவருகிறது; சீனாவும்—அமெரிக்காவும் உதவி செய்து தன்னைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையிலேயே அவர் இன்னமும் பேசிவருவதையும் இந்தியா கவனித்து வருகிறது.

பாகிஸ்தானில் இராணுவ அதிகாரிகளைப் பதவியிலிருந்து வெளியேற்றி அவர் மேற்கொண்ட அபாய நடவடிக்கையும், விரைவில் மக்களாட்சி மலரும் என்று கூறிய உறுதிமொழியும் பயனளிக்க வேண்டுமென்றால் நிலைமையை உணர்ந்து செயல்பட்டு இந்தியாவுடனை உறவைப் பலப்படுத்துவதில்தான் இருக்கிறது.

சீனாவும்—அமெரிக்காவும் பாகிஸ்தானுக்கு எந்த விதத்தில் ஆதரவு தரப்போகின்றன என்பது தெரியவரும் வரையில், பாகிஸ்தானை எப்படிக் கருத வேண்டுமென்பதை இந்தியாவால் தற்போது முடிவு செய்ய இயலாது; அது மட்டுமல்ல—இந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் அதிகார பலம் குறித்து வல்லரசுகள் எப்படி மதித்துச் செயல்படப் போகின்றன என்பதைப் பொறுத்தும் அது அமைய வேண்டியிருக்கிறது; நேற்று ஐ. நா. அவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், இந்த நிலைமையைப் பாதி உணர்ந்துவிட்டதைத் தெரிவிக்கிறது என்றும் இங்கு கருதப்படுகிறது.

ஆனால் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக, இரஷ்யா இன்னமும் வங்க தேசத்தை அங்கீகரிக்க அவசரம் காட்டாதது இங்கு பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்பிரச்சினையில் கருத்து வேறுபாடு கொண்டிருக்கும் அமெரிக்காவும்—பிரிட்டனும், வங்க தேசத்தை அங்கீகரிப்பது சம்பந்தமாகத் தகுந்த நேரத்தில் கலந்து பேசி முடிவு எடுப்பது என்று தீர்மானித்திருக்கின்றன.

ஆக, பாகிஸ்தானும் வல்லரசுகளும் கடைபிடிக்கும் கொள்கையைப் பொறுத்தே இப்பகுதியில் அமைதியும்—வளர்ச்சியும் அமையும் என்பது சுட்டிக் காட்டப்படுகிறது.

சீனா அச்சுறுத்துகிறது

பாகிஸ்தானுடன் ஏதாவது ஒருவித நட்புறவு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளுமாறு செஞ்சீனாவைப் பூட்டோ வற்புறுத்தக்கூடுமாம்.

சீனத் தலைமையமைச்சர் சூ-யென்-லாய், பூட்டோவுக்குக் கனிப்பட்ட முறையில் நண்பராவார்; பூட்டோவின் 'திறமை'களைச் சீனத் தலைமையமைச்சர் பாராட்டக்கூடியவராவார்.

இந்தியா—பாகிஸ்தான் போரில் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட தோல்வியை, தனது தோல்வியாகச் செஞ்சீனா கருதுகிறது; எனவே இந்தியாவுக்கு எதிராகச் சீனாவுக்கும்—பாகிஸ்தானுக்கும் இடையே ஏதாவது ஒருவித நெருக்கமான கூட்டுறவு ஏற்படக்கூடும் என்று கருதப்படுகிறது.

கராச்சியில், சீனாவுக்குத் தங்குதடையற்ற துறைமுக வசதிகளைப் பாகிஸ்தான அளிக்கக்கூடிய நிலைமைகளும் இருக்கின்றன.

பாகிஸ்தானுக்குத் தொடர்ந்து ஆதரவு தரப்போவதாக சீனா உறுதி கூறியிருக்கிறது; 'தெற்கு ஆசியத் துணைக்கண்டப் பகுதியில் இனிமேல் அமைதியே இராது' என்றும் சீனா மிரட்டியிருக்கிறது.

பாகிஸ்தான் அதிபராக பூட்டோ வந்துள்ள நிலையில், சந்தர்ப்பம் வரும்போது சீனா இந்தியாவுக்கு தொந்தரவு தர முயலும் என்றும் கருதப்படுகிறது.

பூட்டோவும் மிரட்டுகிறார்

"வங்காள தேசத்தை அங்கீகரிப்பது, தெற்கு ஆசியத் துணைக்கண்டப் பகுதியில் பதட்ட நிலையை அதிகரிக்கும்" என்று பாகிஸ்தான் அதிபர் பூட்டோ ஆசிய நாடுகளுக்கு தெரிவித்திருக்கிறார்.

மேற்குப் பாகிஸ்தான் அரசின் புதிய கொள்கை, முஸ்லிம் நாடுகளுக்கு முதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேஷிய அதிபர் சுகர்தோவுக்கும், மலாசியத் தலைமையமைச்சர் துன் அப்துல் ரஜாக்குக்கும் பூட்டோ விரைவில் கடிதம் எழுதுவார் என்று சொல்லப்படுகிறது.

முஜிபுர் ரகிமான் குறித்து விரைவிலேயே முடிவு

கிழக்கு வங்கப் பிரச்சினைக்குத் தீர்வு

சீனாவுக்கும்-இரஷ்யாவுக்கும் செல்லப்போவதாக பாகிஸ்தான் அதிபர் பூட்டோ அறிவிப்பு

இஸ்லாமாபாத், டிச 23—

பாகிஸ்தான் அதிபர் பூட்டோ, தாம் விரைவில் சீனாவுக்கும்—இரஷ்யாவுக்கும் செல்லவிரும்புவதாக அறிவித்தார்; ஆனால், அப்பயணம், கிழக்குப் பாகிஸ்தான்' பிரச்சினை முடிவுறும் வரையில் இருக்காது என்றும் அவர் தெரிவித்தார்.

முஜிபுர் ரகிமான் குறித்துத் தாம் விரைவிலேயே ஒரு முடிவுக்கு வர விரும்புவதாக அவர் கூறினார்; அவருடன் பேசி கிழக்கு வங்கப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் போவதாகத் தெரிவித்த அவர், கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து 'இந்திய ஆக்கிரமிப்பாளர்கள்' வெளியேற வேண்டும் என்றும் கூறினார்.

'கிழக்குப் பாகிஸ்தானுக்கு' நியாயமான ஒரு தீர்வு காண்பதன் முதற்படியாகவே முஜிபுர் ரகிமானை வீட்டுக் காவலில் வைக்க முடிவு செய்ததாகவும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் பொருளாதாரத்தின்மீது 22 குடும்பங்களின் ஆதிக்கம்

புதுடில்லி, டிச. 23—

பாகிஸ்தான் பொருளாதாரத்தின்மீது முழு ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த 22 செல்வந்தர்களின் குடும்பங்களைச் சேர்ந்த பாஸ் போர்ட்'டுகளை, இஸ்லாமாபாத்தின் புதிய அரசு ரத்து செய்திருக்கிறது.

இந்தக் குடும்பங்கள்தான் பாகிஸ்தான் பொருளாதாரத்தை இயக்கி வந்தன; இவைகளின் சொத்து மதிப்புமட்டும் ரூ. 500 கோடி இருக்குமாம்.

இதன்றி, ஆண்டுதோறும் அந்தச் சொத்துக்கள் ரூ. 50 கோடி அளவுக்கு உயர்ந்துகொண்டே சென்றன.

இன்சூரன்சுத் தொழிலில் 97 சதவிகிதத்தை இந்தக் குடும்பங்களே நடத்துகின்றன. பாங்கித் தொழிலில் 80 சதவிகிதமும், தொழில் உற்பத்தியில் 60 சதவிகிதமும் இவைகளிடமே சிக்கியிருக்கின்றன.

இதுவரை ஏற்பட்ட எல்லா அரசுகளும் இந்தக் குடும்பங்களின் தொழில் ஆதிக்கம் வளருவதற்கே ஆக்கம் அளித்துவந்திருக்கின்றன; இதற்குப் பதிலாக அந்தத் தொழில் ஆதிக்கக்காரர்கள் அரசியல் துறையில் ஆதரவு அளித்து வந்திருக்கின்றனர்.

கிழக்கு வங்கத்தில் வளர்ச்சியே ஏற்படாமல் இருந்துவந்ததற்குக் காரணம், மூலப்பொருள்களெல்லாம் இவைகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்துவந்தது என்பதை, பாகிஸ்தான் அரசு காலங்கடந்து உணர்ந்துவிட்டிருக்கிறது.

போர் வீரர்களுக்கான பரிசுப் பொருள்கள்

தலைமையமைச்சரிடம் நேரில் வழங்க முதலமைச்சர் கலைஞர் டெல்லி செல்கிறார்

சென்னை, டிச. 23—

இராணுவ வீரர்களுக்கெனத் தமிழ்நாட்டில் திரட்டப்பட்ட பல்வேறு பொருள்களையும் தலைமையமைச்சர் இந்திரா காந்தியிடம் நேரிலேயே கொடுப்பதற்காக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் நவ. 30-ம் நாளன்று புதுடில்லிக்குப் புறப்பட்டுச் செல்கிறார்; 31-ம் நாள் காலையில் தலைமையமைச்சரைச் சந்தித்துப் பேசுகிறார்; அதுபோது, சென்னையில் திரட்டப்பட்ட பரிசுப் பொருட்களை வழங்குவார்.

டெல்லியில் நடைபெறும் திட்டக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டுவிட்டு, சனவரி 1-ம் நாளன்று சென்னைக்குத் திரும்புவார்.

வங்க தேச மக்களின் உரிமைப் போராட்டத்துக்குத் தோள் கொடுத்துத் துணையாக நின்று—மாபெரும் வெற்றி தேடித்தந்த இந்திய வீரர்களுக்கெனத் திரட்டப்பட்ட பல்வேறு பொருட்களை, நவ. 29-ம் நாள் காலை 10 மணிக்குச் சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெறவிருக்கும் விழாவில், சமுதாய நலத்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் வழங்குவார்.

இந்நிகழ்ச்சியின்போது திருமதி ஜோதி வெங்கடாசலம் சிறப்புரையாற்றுவார்.

இப்பொருட்கள், 29-ம் நாள் பகல் 3-10 மணிக்குச் சென்னையிலிருந்து ஜனதா விரைவு வண்டியில் அனுப்பப்படும்.

31-ம நாள் காலையில் முதலமைச்சர் டில்லியில் தலைமையமைச்சரிடம் பொருட்களை வழங்குவார்.

வங்க தேசத்தின் பொருளாதாரம்

சீர்குலைக்க எதிரிகள் திட்டமிட்டனர்

டாக்கா, டிச. 23—

வங்க தேசத்தில் சரணாகதி அடைவதைத் தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட பாகிஸ்தான் இராணுவம், வங்க தேசத்தின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பது என்ற கேடு நோக்குடன் ஏராளமான நோட்டுக்களை அழித்துவிட்டது.

டிச. 15 16-ம் நாட்களில் பாகிஸ்தான் இராணுவத்தினர், அரசு பாங்கிக்குச் சென்று அங்கிருக்கும் அதிகாரியை அச்சுறுத்தி சுமார் ரூ. 100 கோடி மதிப்புடைய நோட்டுக்களை அழித்துவிட்டனர்.

இதன்றி, விலை மதிப்புடைய பொருட்களை அழிப்பதற்கும்—பாங்கிகளைத் தகர்த்துவிடத் திட்டமிட்டிருந்ததாகவும் தெரியவருகிறது; இதற்காக வகுக்கப்பட்டிருந்த திட்டங்கள் இப்போது கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

பெரிய அதிகாரிகளைத் தீர்த்துக்கட்டவும் பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டிருந்ததாம்.

அரசாங்க பாங்கி அறிவித்த கணக்குப்படி, வங்க தேசத்தில் பாகிஸ்தான் நோட்டுக்கள் ரூ 362 கோடி புழக்கத்திலிருந்ததாகத் தெரியவருகிறது.

நெருக்கடி நிலை அடியோடு நீங்கிவிடவில்லை

எதிரியின் போர் வெறி தணியும்வரை எச்சரிக்கையாக இருப்போம்

நாட்டைக் காக்கும் பணியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது

தாய்மார்களின் கடமையை வலியுறுத்தி கலைஞர் விளக்கம்

சென்னை, டிச. 23

"பாகிஸ்தானின் அதிபராகப் பதவியேற்றிருக்கும் ஜுல்பிகர் அலி பூட்டோவின் பேச்சுக்கள் கேலிக்கும் – நகைப்புக்கும் இடந்தரத்தக்க அளவிற்கு இருந்தாலும், அவ்வளவையும் நாம் புறக்கணித்து விடுவதற்கில்லை; எப்படியோ ஒரு வெறித்தனம் -- பழிவாங்கும் மனப்பான்மை பூட்டோவிற்கு இருக்கிறது; ஆகவே, போர் முடிந்துவிட்டது என்று நாம் கருத முடியாது; பூட்டோ மறுபடியும் போரைத் தொடங்கலாம்; ஆகவே, அவரவர்கள் தங்கள் வேலையைத் தொடங்கலாம் என்று எண்ணுமல், எல்லைத் தளங்களையெல்லாம் பாதுகாப்புடன் வைத்துக்கொள்ள -- எல்லையில் காவல் புரியும் வீரர்களின் தேவைகளை அறிந்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"போர் ஏற்பட்ட நேரத்தில் உள்ள சங்கடங்களைவிட அதற்குப்பின் உள்ள விளைவுகளைச் சமாளிப்பதில்தான் அதிகச் சங்கடம் நாட்டிற்கும் -- அரசுக்கும் ஏற்படும்; அப்படிப்பட்ட சங்கடங்களை நாம் சமாளிக்க வேண்டும்; போர் முடிந்துவிட்டாலும், போரின் விளைவுகளை எதிர்த்து நாம் ஒரு போர் நடத்தவேண்டும்; அதிலே தாய்மார்களுடைய கடமை மிகமிகப் பெரிது"

என்று நேற்றைக்கு முன்னுள், சென்னை லேடி வெலிங்டன் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் நடந்த விழா ஒன்றில் உரையாற்றுகையில் முதல்வர் கலைஞர் அவர்கள் கூறினர்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு. டைட்டஸ் தலைமையில் நடந்த இந்த விழாவில், கல்லூரியின் சார்பாக நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு ரூ 6,574 60-ம், பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு ரூ. 12,283.06-ம் முதல்வரிடம் வழங்கப்பட்டது.

கல்லூரி முதல்வர் திருமதி ஸ்டெல்லா சுந்தரராசன் வரவேற்புரையாற்றினர்.

முதல்வர் கலைஞர் நிதியைப் பெற்றுக்கொண்டு பேசியதாவது:-

"ஏழெட்டு நாட்களுக்கு முன்பு இந்த விழாவை நடத்தியிருந்தால்--நீங்கள் இப்போது காட்டும் மகிழ்ச்சியைப்போல் இல்லாமல் -- ஏதோ ஓர் வகை உணர்ச்சியோடு கூடியிருக்கக்கூடும்.

நம் வீடுகளில் பெரியவர்கள் 'மழைபோல் வந்து பனிபோல் நீங்கிற்று' என்று கூறும் முதுமொழிக்கேற்ப, இந்தியாவிற்கு மழைபோல் நெருக்கடி வந்தாலும், அது, பனிபோல் நீங்கிவிட்டதென்றல் -- அதற்குக் காரணம், இந்திய மக்கள் காட்டிய ஒற்றுமைதான்.

நாம் பல்வேறு கொள்கைகளையும் -- கருத்துக்களையும் உடையவர்கள் என்றலும் இந்தியாவிற்கு ஓர் ஆபத்தென்றல் -- அது எந்தப் பக்கமிருந்து வந்தாலும் -- அதை விளைவிக்கக்கூடியவர்கள் எவ்வளவு பெரிய அசகாய சூரர்களாக இருந்தாலும்--அவர்களை எதிர்த்து வீழ்த்தக்கூடிய வலுவையும், ஆற்றலையும் இந்திய மக்கள் பெற்றிருக்கிறர்கள் என்பதை இந்தத் தடவையும் எதிரிகளும் -- உலகமும் உணர்ந்திருக்கின்றனர்.

இந்த வெற்றிக்கு முக்கியக் காரணமாக இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்தி இருந்ததால், தாய்க் குலத்தைச் சேர்ந்த நீங்கள் பெரும் மகிழ்ச்சியினைப் பெற்றிருக்கிறீர்கள்; இந்த வெற்றி நாட்டு மக்கள் அனைவரும் காட்டிய ஒற்றுமையின் வெற்றியாகக் கிடைத்திருக்கிறது.

இன்று, 'போர் நின்றுவிட்டது -- நாம் அலுவல்களைக் கவனிக்கலாம்' என்ற நிலை இல்லாமல், மீண்டும் போரைச் சந்திக்கக்கூடிய சூழ்நிலை உருவாகலாம் என்ற நிலைதான் நாட்டில் இருக்கிறது.

15 நாட்களுக்கு முன்பு, 'இதுதான் என் கடைசி யுத்தம்' என்று முழங்கிக்கொண்டு போர்க்களத்தில் யாகியா கான் குதித்தார்; நான் அமெரிக்காவிலிருந்து திரும்பி முதலில் கலந்துகொண்ட 5-ந் தேதி கூட்டத்திலேயே சொன்னேன் -- 'யாகியா கான் இதுதான் கடைசி யுத்தம் என்று சொல்கிருர்; அவருடைய முடிவை அவரே முன்கூட்டி அறிந்து கூறுகிருர் என்பதை அறிய நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்று சொன்னேன்; அவரைப் பொறுத்தவரையில், இது, கடைசி யுத்தமாகவே ஆகிவிட்டது!

அவருக்குப் பிறகு இன்று பாகிஸ்தானின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற பூட்டோ, அவரை நல்லவராக ஆக்கக்கூடிய அளவிற்கு வந்ததும் வராததுமாக, 'பழிக்குப் பழி வாங்கித் திருவேன்; இராணுவம் தான் தோற்றது; பாகிஸ்தான் தோற்கவில்லை' என்று கூறியிருக்கிருர்.

போரில் இராணுவம்தான் தோற்கும் -- நாடு தோற்பது இல்லை; போரின் தோல்வியை, இராணுவத்தின் இழப்பை வைத்துத்தான் கணக்கெடுப்பார்கள்.

"ஆயிரம் ஆண்டுகளுக்கு இப்போர் நடைபெறும்' என்கிருர் பூட்டோ; ஆயிரம் ஆண்டுகளுக்கு பிறகு அவரைப் பார்த்து யாரும், 'ஆயிரம் ஆண்டுகளுக்கு

யுத்தம் நடைபெறுமென்று சொன்னயே -- ஏன் நடக்கவில்லை என்று கேட்கமாட்டார்கள்' என்ற தைரியத்தில் பூட்டோ அவ்வாறு கூறிக்கொண்டிருக்கிருர்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்கள், இன்றையப் போர் முஸ்தீபுகளுக்காக தங்கள் ஆதரவை அளித்து வருகிறதென்றாலும், நம் தமிழ்நாடு, 'எல்லா மாநிலங்களையும் முந்திக்கொண்டு கடமையை ஆற்றுகிறது' என்ற பெருமையோடு இருக்கிறது.

அதிலும் பெண்கள், ஆடவரைவிடத் தீவிரமாக அதிலே கவனம் செலுத்துகிருர்கள்; அதில் ஒரு கட்டமாகத்தான், இந்தக் கல்லூரியின் சார்பில் பாதுகாப்பு நிதிக்காக ரூ 6 000-த்திற்கு மேற்பட்ட தொகையினை என்னிடம் அளித்திருக்கிறீர்கள்; அதைப் போலவே பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கு ரூ. 12,000-க்கு மேற்பட்ட தொகையையும் அளித்திருக்கிறீர்கள்.

பிச்சைக்காரர்கள் வேதனை தீர வேண்டுமென்பதற்காக நீண்ட நாட்களாகக் கனவு கண்டு வருகிறேனென்றாலும் அந்தக் கனவை நனவாக்கும் பெரும் பொறுப்பைத் தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழகத்திலுள்ள 60,000 பிச்சைக்காரர்களைத் தொல்லையிலிருந்து விடுவித்து வேலை வாய்ப்பு அளித்துத் தொழில் கற்றுக்கொடுக்கத் தமிழக அரசு சென்ற ஆண்டு ஒருதிட்டம் தீட்டி-- அது இன்று நடைமுறையில் இருந்துவருகிறது.

அதன் முதல்கட்டமாக 6,000-க்கு மேற்பட்ட தொழுநோய் பிச்சைக்காரர்களுக்கு வாழ்வு தர ஆறு இடங்களில் விடுதிகள் அமைக்கும் வேலை தீவிரமாக நடந்து வருகிறது.

என் பிறந்த நாளையொட்டி, இந்த ஆண்டிற்கு இதற்காக தேவைப்படும் ரூ. 40 இலட்சத்தைப் பிறந்த நாள் பரிசாகத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன்; அப்படிக் கேட்டு ஆறேழு மாதங்கள் முடிவதற்கு முன்பே, கேட்டது ரூ. 40 இலட்சம்-ஆனல் இதுவரை கிடைத்திருப்பது ஒரு கோடி ரூபாய் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் அளித்த இந்த ரூ 12 000 அந்த ஒரு கோடியைத் தாண்டி இரண்டாவது கோடி ரூபாய்க்கு அஸ்திவாரமாக அமைகிறது.

நாட்டைப் பாதுகாப்பது என்பது, எல்லையில் போர் வீரர்களை நிறுத்தி எதிரியை முறியடிப்பது என்பது மாத்திரமல்ல; எல்லையில் இருக்கும் போர் வீரர்கள், வெளியிலிருந்து வருகின்ற பகையை எதிர்த்து நாட்டைப் பாதுகாப்பார்கள்; அதே நேரத்தில், உள்நாட்டிலுள்ள வறுமை -- இல்லாமை -- அறியாமை -- ஏழ்மை -- இங்கேயிருக்கின்ற வர்ணமுறைகள் – ஐந்தாம் படைகள் -- சோர்வு அனைத்தையும் நோக்கி நம் நாட்டில் ஒரு விறுவிறுப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

மனிதன் மனிதனுக வாழவேண்டும்; வறுமையிலிருந்து விடுபடவேண்டும்; இந்த நாட்டில் யாரும், 'பட்டினியால் செத்தார்கள் -- இல்லாத காரணத்தால் இரந்து உயிர் வாழும் நிலை ஏற்பட்டது' என்ற அந்தக் கொடுமையிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும்.

நாட்டைப் பாதுகாப்பது என்பது முதலில் சொன்னதைப் போல் இரண்டு வழி; ஒன்று -- வெளிப் பகையிலிருந்து பாதுகாத்தல்; அடுத்தது -- உள் பகையிலிருந்து நாட்டைப் பாதுகாத்துக்கொள்ளல்; அந்த உட்பகை, 'ஏழை எளியவர்கள் வாழ முடியாமல் தவிக்கிருர்களே -- அப்படிப்பட்ட மக்களை விடுவிப்பது' என்ற அந்த உட்பகையிலிருந்து மக்களை நாம் விடுவிக்க வேண்டும்.

'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்று பாடிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது; எல்லோரும் இந்நாட்டு மன்னராக ஒரே ஒரு நாள்தான் -- தேர்தல் நாளில் -- கையில் வாக்குச் சீட்டு இருக்கிறவரை -- அந்த ஒரு நாள்தான் எல்லோரும் இந்நாட்டு மன்னராக இருக்கிருர்கள்!

அந்த ஒரு நாள் மாத்திரம் எல்லோரும் இந்நாட்டு மன்னராக இல்லாமல், எல்லா நாளும் -- எல்லா மக்களும் -- எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்கின்ற அளவிற்கு ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கவேண்டிய பொறுப்பு -- கடமை நமக்கிருக்கிறது.

இந்தப் போர்க் காலத்திலும், நாட்டில் நடைபெறவேண்டிய நல்ல காரியங்களைச் சிந்தித்து நிதி வழங்கியிருக்கிறீர்கள்; வெளிப் பகையை வீழ்த்த வேண்டுமென்பதற்காகப் பாதுகாப்பு நிதியும், உட்பகையை வீழ்த்தப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதியும் அளித்திருக்கிறீர்கள்!

பொதுவாகப் பெண்களுக்கு வீரமும் உண்டு -- இரக்கமும் உண்டு; வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் பாதுகாப்பு நிதியாக ரூ 6,000-மும், இரக்கத்தை வெளிப்படுத்த பிச்சைக்காரர்கள் நிதியாக ரூ. 12 000-மும் தந்திருக்கிறீர்கள் எனக் கருதுகிறேன்.

பாதுகாப்பு நிதிக்குக் குறைவாகக் கொடுத்தால், 'வீரம் குறைவு -- இரக்கம் அதிகம்' என்று நான் சொல்லமாட்டேன்; இப்போது எதிரிகளால் ஏற்படுகின்ற ஆபத்தின் அளவு குறைவு என்பதால் இதற்குக் குறைவாகவும் -- அதற்கு அதிகமாகவும் தந்திருக்கிறீர்கள் எனக் கருதுகிறேன்."

போர்வீரர்கள்-- பழைய விடுமுறையை அனுபவிக்க வாய்ப்பு

புதுடில்லி, டிச. 23.—

நாட்டின் எல்லையில் இருந்த நெருக்கடி நிலையின் காரணமாகவும், அதன் பின்னர் பாகிஸ்தான் தொடுத்த ஆக்கிரமிப்புப் போரின் காரணமாகவும் 1971-ம் ஆண்டில் நமது போர்ப் படையைச் சேர்ந்த அநேகர் அந்த ஆண்டுக்குத் தங்களது ஆண்டு விடுமுறையை முற்றிலுமோ அல்லது ஓரளவோ அனுபவிக்க முடியாமல் போயிற்று.

இப்படிப்பட்ட போர் வீரர்களுக்கு 1972 அல்லது 1973-வது ஆண்டில் அந்த ஆண்டுகளுக்கு உரிய விடுமுறையுடன் 1971-ம் ஆண்டிற்கான விடுமுறையும் சேர்த்து அளிக்கப்படும்.

1971-ஆம் ஆண்டில் விடுமுறைப் பயணச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளாதவர்களும், 1972 அல்லது 1973-வது ஆண்டில் அந்தச் சலுகையை அனுபவித்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

(3-ம் பத்தி தொடர்ச்சி)

இராஜிநாமாச் செய்திருக்கின்றனர்.

பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் ஒருவரையும், வேறொருவரையும் கல்லூரியிலிருந்து நீக்கிவிட்டதைத் தொடர்ந்து அவர்கள், வெளியார் சிலரைக் கூட்டிவந்து பேராசிரியர்களைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக மூவரைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

தாக்கப்பட்ட பேராசிரியர்கள் இராஜிநாமா

காசிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் வன்செயல்

வாரணசி, டிச. 22—

காசி இந்துப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 3 பேராசிரியர்கள் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று அவர்கள்

(4 ம் பத்திப் பார்க்க)

ஆலய வருவாயிலிருந்து மக்கள் நலப் பணி

ஆண்டவனுக்குரிய காரியங்கள் குறைவின்றி நடைபெறும்

கழக அரசின் சீரிய நோக்கங்கள் -- நாவலர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, டிச. 21--

"கோவில்களில் நடைபெற வேண்டிய காரியங்கள் சிறிதும் குறைவில்லாமல் நடைபெற வேண்டுமென்பதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறது.

"தமிழகக் கோவில்களின் வருமானம் பெருக வேண்டுமென்பதில் இந்த அரசு கவனமாக இருந்ததன் காரணமாகக் கழக ஆட்சி ஏற்படுவதற்குமுன் தமிழகக் கோவில்களின் ஆண்டு வருமானம் ரூ. 3.97 கோடியாக இருந்தது; இப்போது ரூ. 6 கோடிக்கு மேல் உயர்ந்துள்ளது.

"'இயங்கும் உயிர் அனைத்தும் ஈசன் கோவில்' என்பதற்கேற்ப, கோவில்கள்மூலம் சமுதாயம் பயன்பெற வேண்டுமென்று நமது முன்னேர் கருதினர்; ஆகவேதான், தங்கள் சொத்துக்களைக் கோவிலுக்கும் கொடுத்துள்ளனர்; அந்த வகையிலேதான் கோவில் பணிகளுக்குப் போக மீதியுள்ள பணத்தைக் கொண்டு கல்விக்கு, கருத்துவத்துக்குப் பயன்படுத்த அரசு கருதியுள்ளது,

"பெரிய பெரிய கோவில்களின் வருமானங்களை ரூ $4\frac{1}{2}$ கோடி அளவில் ஒன்றுகச் சேர்த்தும் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த அரசு கருதியுள்ளது; அதற்கென்று தனியாக மேற்பார்வைப் பொறியாளர் நியமிக்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது.

"அதே நேரத்தில், கோவில்களைப் புறக்கணிக்கவும் அரசு தயாராக இல்லை; கோவில்கள் பாழடைய இந்த அரசு விட்டுவிடாது; கோவில்களைச் சீர்திருத்தும் வேலையும் அரசு மேற்கொண்டுள்ளது"

என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை— நுங்கம்பாக்கம் அகத்தீசுவரர் பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் தேவஸ்தானம் புதிதாகக் கட்டவிருக்கும் திருமண மண்டபத்துக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

விழாவுக்கு, அறநிலையம் பாதுகாப்புத் துறை அமைச்சர் கண்ணப்பன் தலைமைதாங்கினர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இராம. அரங்கண்ணல், கே. எம். சுப்பிரமணியம், அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் கே. எஸ். நரசிம்மன் ஆகியோர் பேசினர்.

சனவரி முதல் பல்லவா கார்ப்பரேஷன்

பொங்கல் புதுநாளில் பாண்டியா கார்ப்பரேஷன் துவங்கும்

அரசுடைமைப் பேருந்துகளை இயக்க ஆறு அமைப்புகள்

"பல்லவா போக்குவரத்துக் கார்ப்பரேஷனும், பாண்டியா போக்குவரத்துக் கார்ப்பரேஷனும் பதிவாகி விட்டன.

பல்லவா கார்ப்பரேஷன், சென்னையைச் சுற்றியுள்ள அரசு பஸ்களை நிர்வகிப்பது ஆகும்; இது, சனவரி 1-ம் நாள் தொடங்குகிறது.

பாண்டியன் கார்ப்பரேஷன், மதுரையைச் சுற்றியுள்ள அரசுடைமைப் பஸ்களை நிர்வகிக்கும்; இது, சனவரி 14-ந்தேதி செயல்படத் தொடங்கும்"

என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் கூறினர்,

பல்லவா -- பாண்டியன் தவிர, மீதி 4 கார்ப்பரேஷன்கள் விரைவில் அமைக்கப்படும்.

சென்னையிலிருந்து பழனி---நெல்லை--- இராமேசுவரத்துக்கு பஸ்

சென்னை—இராமேசுவரம்; சென்னை—திருநெல்வேலி; சென்னை—பழனி ஆகிய ஊர்களுக்கிடையே எக்ஸ்பிரஸ் பஸ் விடப்படுகிறது.

இராமேசுவரம், திருநெல்வேலி, பழனியிலிருந்து இந்தப் பஸ்கள் புறப்படும்.

சென்னை--இராமேசுவரம்

சென்னை--இராமேஸ்வரம் (மண்டபம்) இடையே இரவு நேர எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்படும்; சென்னை— விழுப்புரம்—திருச்சி--புதுக்கோட்டை வழியாக இந்தப் பஸ்கள் செல்லும்; சென்னை-இராமேசுவரத்திற்கிடையே 2 பஸ்கள் ஓடும்.

சென்னையிலிருந்து மாலை 5-45 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 7-30 மணிக்கு இராமேசுவரம் போய்ச் சேரும்; இராமேசுவரத்திலிருந்து மாலை 6-30 மணிக்குப் புறப்பட்டு மறுநாள் காலை 8-15 மணிக்கு வந்து சேரும்; கட்டணம் ரூ. 17 40.

சென்னை--திருநெல்வேலி

சென்னை—நெல்லை இடையே மொத்தம் 4 பஸ்கள் ஓடும்; சென்னையிலிருந்து இரண்டும், நெல்லையிலிருந்து இரண்டும் ஓடும்.

சென்னையிலிருந்து மாலை 6 30 மணிக்கும், இரவு 7-30 மணிக்கும் புறப்படும்.

பஸ்கள் மறுநாள் காலை 8-45 மணிக்கும், 9-45 மணிக்கும் திருநெல்வேலி போய்ச் சேரும்; கட்டணம் ரூ. 18 80.

சென்னை--பழனி

சென்னை — பழனி பாதையில் மொத்தம் 2 பஸ்கள் ஓடும்.

சென்னையிலிருந்து விடியற்காலை 6 மணிக்குப் புறப்படும் பஸ் மாலை 5-45 மணிக்குப் பழனி போய்ச் சேரும்.

பழனியிலிருந்து மாலை 6-30 மணிக்குப் புறப்படும் பஸ், மறுநாள் விடியற்காலை 5-45 மணிக்கு சென்னைக்கு வந்து சேரும்; கட்டணம் ரூ. 14 80.

சென்னை--திருவண்ணுமலை

சென்னை — திருவண்ணுமலை இடையே புதிதாக ஒரு பஸ் விடப்படும்.

திருவண்ணுமலையில் விடியற்காலை 5 45 மணிக்கு புறப்படும் பஸ் 10 45 மணிக்கு சென்னை வரும்; மாலை 5-45 மணிக்கு மீண்டும் புறப்பட்டு இரவு 10 15 மணிக்குத் திருவண்ணுமலை போய்ச் சேரும்; கட்டணம் ரூ. 6.

சென்னை--குடியாத்தம்

இதேபோல், சென்னை—குடியாத்தம் இடையே ஒரு பஸ் விடப்படும்; கட்டணம் ரூ. 5 30.

முற்போக்குச் சமூகத்தை உருவாக்கும் கல்வி முறை

நிபுணர்களுக்குக் கல்வியமைச்சர் நாவலர் வேண்டுகோள்

சென்னை, டிச. 23-

"காலத்திற்கு ஏற்றாற்போல் முற்போக்குக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்கும் வகையில், ஒரு சிறந்த கல்வித் திட்டத்தைக் கல்வி நிபுணர்கள் இயற்றல் வேண்டும்"

என்று, கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாடு பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தின் வெள்ளி விழா உரையை மேலும் அவர் கூறியதாவது:—

"ஒரு நிலையான கல்வி முறையை உருவாக்குவதே கல்லூரிப் பேராசிரியர்கள், மற்றுமுள்ள ஆசிரியர்களின் உள்ளார்ந்த குறிக்கோள் ஆகும்.

"கல்வித் துறையில் அரசியல் வாதிகளுக்கு எவ்விதச் செல்வாக்கும் ஏற்படும்படிவிடக் கூடாது."

விழாவின் சார்பில் நடந்த பல்வேறு கருத்தரங்குகளை, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"கல்லூரிகளில் இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்கு மாலைநேரக் கல்லூரிகளையும், அஞ்சல் மூலம் கல்வி போதனையையும் ஏற்படுத்தலாம்.

ஆனல், உயர் படிப்புக்கு அதிக வசதிகள் செய்வதன் மூலமாக, வேலையில்லாத பட்டதாரிகள் அதிகம் பேர் ஏற்படும் நிலைமை உருவாகிவிடக் கூடாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கல்லூரிகளில் முன்பு இருந்தது போல், இப்போது மீண்டும் 2 ஆண்டுக்கால 'இண்டர்மீடியட்' வகுப்பை ஏற்படுத்துவது பற்றி பல்கலைக் கழக சிண்டிகேட்டின் குழு ஒன்று பரிசிலனை செய்துவருகிறது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில், படிப்பின் தரம் குறைந்துவிட்டதென்று கூறப்படுவது உண்மையல்ல.

ஐ.ஏ.எஸ். போன்ற பரீட்சைகளுக்கு இப்பகுதியிலிருந்து எத்தனைப் பேர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பதை மாத்திரம் வைத்துப் படிப்பின் தரத்தையே எடை போடுவது சரியானமுறையாகாது.

இங்கு படித்த பல இளைஞர்கள், அமெரிக்கா போன்ற மேல்நாடுகளிலே ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு உள்ளதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

கல்லூரிகளில் டியூட்டர்கள்—டெமான்ஸ்டிரேட்டர்களாகப் பணிபுரிபவர்களை 5 ஆண்டுக் காலப் பணிக்குப் பிறகு வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று சென்னைப் பல்கலைக் கழகம் எவ்வித உத்தரவும் போடவில்லை; அவ்வாறு எந்தக் கல்லூரியாவது நடவடிக்கைஎடுத்து வருகிறதென்றல் அது தவறின் பாற்பட்டதாகும்."

சென்னைப் பல்கலைக் கழகத்தில் டியூட்டர்கள்--டெமான்ஸ்டிரேட்டர்களாகப் பணிபுரிந்து வந்தவர்கள், அவ்வாறுதான் முன்பு வேலைநீக்கம் செய்யப்பட்டு வந்ததாகவும், தாம் துணைவேந்தராகப் பதவியேற்ற பிறகு அந்த உத்தரவையே ரத்து செய்ததாகவும் அவர் கூறினர்.

உயர் படிப்புத் துறையில் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் செய்துவரும் பணியை துணைவேந்தர் பாராட்டிப் பேசினர்.

கருத்தரங்குகளுக்கான இயக்குநரும் -- சென்னை கிருஸ்துவக் கல்லூரி முதல்வருமான டாக்டர் சந்திரன், தேவநேசன் உரை நிகழ்த்தினர்; தனியார் கல்லூரிகள் சங்கத்தின் தலைவர் என்ற முறையிலே கல்வித் துறையில் எல்லாவித ஒத்துழைப்பையும் நல்குவதற்குத் தாம் தயாராக இருப்பதாக அவர் கூறினர்.

பூண்டி புஷ்பம் கல்லூரி முதல்வர் பேராசிரியர் எம்.எஸ். கோவிந்தசாமி தலைமை வகித்தார்.

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்கு ரூ. 1 கோடி

வட ஆர்காடு மாவட்டத்தில் திரட்ட முடிவு

நாட்டுப் பாதுகாப்பு நிதிக்குப் பணம் திரட்டுவதற்காகத் தமிழ்நாடு அரசு அடுத்த மார்ச் மாதத்தில் சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தத் திட்டமிட்டிருப்பது தெரிந்ததே; இதற்காக ரூ. 100 -- ரூ. 25 -- ரூ. 10 ஆகிய விலைகளில் இந்தப் பரிசுச் சீட்டுகள் வெளியிடப்படும்.

இத்தகவலை வடார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் வி. இராமமூர்த்தி இங்கு தெரிவித்தார்; வடக்கு வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் அவர் உரையாற்றினர்.

"பாதுகாப்பு நிதிக்காகத் தமிழ்நாட்டில் மொத்தம் ரூ 10 கோடி திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது; அவற்றில் ரூ. 5 கோடி சிறப்புப் பரிசுச் சீட்டுகள் வெளியிடுவதன் மூலமாகத் திரட்டப்படும்.

"பொதுமக்களிடம் நன்கொடை பெறுவதன் மூலம் மீதி ரூ. 5 கோடி திரட்டப்படும்" என்று அவர் சொன்னர்.

"வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் மொத்தம் ரூ. 1 கோடி திரட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது; இதில் பாதி -- சிறப்புப் பரிசுச் சீட்டுகள் விற்பனை மூலமாகவும், மீதி நன்கொடைகள் மூலமும் திரட்டப்படும்" என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறினர்.

அம்மன்புரம் தி. மு. க.

உடன்குடி வட்டம் தி. மு. க அமைப்புக் கூட்டம் 1—12—71-ல், திரு. ஆ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டவர்களை நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: த. கந்தசாமி; செயலாளர்: சா. பால்துரை; துணைச் செயலாளர்: ச. சின்னத்துரை; பொருளாளர்: தி. முருகேசன்; வட்டப் பிரதிநிதி: த. நாராயணன்; செயற்குழு உறுப்பினர்கள்: பா. சுப்பிரமணியன், சோ. ரெங்குபால், மாயாண்டி, பொன்னுசாமி, வெற்றிவேல், சின்னதுரை, மால், அய்யாத்துரை.

போர் முடிந்துவிட்டதாகக் கூற முடியாது

உறுதியும் கட்டுப்பாடும் தேவை

தலைமையமைச்சர் இந்திரா காந்தி விளக்கம்

புதுடில்லி, டிச. 23—

"போர் முடிந்துவிட்டதா இல்லையா என்று என்னுல் சொல்ல முடியவில்லை; நிலைமை அவ்வாறு இருக்கிறது; எனவே மக்கள் உறுதியுடனும் -- கட்டுப்பாட்டுடனும் இருக்கவேண்டும்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறினர்.

பாதுகாப்பு நிதிக்குப் பணமும் -- வீரர்களுக்கு வெகுமதிகளும் அளிக்க நிறையபேர் தலைமையமைச்சரின் இல்லத்துக்கு வந்திருந்தனர்; அந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னர்.

இந்தியா வங்காள தேசத்துக்கு உதவி செய்ய முடிந்தது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

"நாம் உறுதியுடனும் -- கட்டுப்பாட்டுடனும் -- பலம் பொருந்தியவர்களாகவும் இருக்கவேண்டும்; சில இலட்சியங்களுக்காக நாம் போராடியுள்ளோம்; அந்த இலட்சியங்களை உறுதியுடன் கடைபிடித்துவர வேண்டும்" என்றும் தலைமையமைச்சர் கூறினர்.

சின்னமனூர் தி. மு. க. பொதுக்கூட்டம்

அமைச்சர் க. அன்பழகன் கலந்துகொண்டார்

சின்னமனூர், டிச. 1—

சின்னமனூர் தி.மு க. சார்பில் சட்டமன்ற உறுப்பினர் திரு பழநிவேல்ராசன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

செயலாளர் சு. செல்வராசு அனைவரையும் வரவேற்றர்.

நல்வாழ்வுத் துறை அமைச்சர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில், தமிழ்ச் சமுதாய உயர்விற்கும் -- முன்னேற்றத்திற்கும், அறிஞர் அண்ணு, தந்தை பெரியார் ஆகியோரின் தொண்டுகள் எந்தளவுக்குப் பயன்பட்டன என்பது குறித்து விளக்க உரையாற்றினர்.

உத்தமபாளையம் வட்டச் செயலாளர் பி எஸ். செல்லதுரை, பெரியகுளம் வட்டச் செயலாளர் கண்ணுச்சாமி, பொதுக்குழு உறுப்பினர் வ. தம்பித்துரை எஸ். வேல்சாமி ஆகியோரும் பேசினர்.

சின்னமனூர் வட்டாரப் பகுத்தறிவாளர் கழகச் சார்பில் அமைச்சருக்கு வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது; துணைச்செயலாளர் குருநாதன் நன்றி கூறினர்.

வங்க தேசத்தின் பொருளாதாரம்--- வளர்ச்சியுற வழி என்ன?

வங்காள தேசம், ஒரு சுதந்தர நாடாகப் பிறந்துவிட்டது; ஆசிய வானத்தில் ஒரு புதிய நட்சத்திரம் தோன்றியிருக்கிறது; ஐ. நா.பேரவையில் சேருவதற்கு ஒரு புதிய நாடு தகுதி பெற்றிருக்கிறது!

ஆசிய வானத்தில் தோன்றியுள்ள இந்தப் புதிய நட்சத்திரமானது, இரத்தத்தையும் கண்ணீரையும் சிந்திப் பிறந்தது!

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வங்காள தேசப் போராட்டம் முடிந்துவிட்டது! சரித்திரத்திலும் -- வீர காப்பியங்களிலும் பல நூற்றாண்டுகளுக்கு மறக்க முடியாத இடத்தை இது பெற்றிருக்கும்!

வங்காள தேசம் உருவாகிவிட்ட அதே நேரத்தில், அதன் பொருளாதாரம் -- வளர்ச்சி வாய்ப்புகள் பற்றியும் பரிசிலனை செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது!

ஒரு நாட்டின் நிலையான தன்மை, அதன் பொருளாதார நிலையையே பொறுத்திருக்கிறது என்பதை எவரும் மறுப்பாரில்லை!

1,43,000 சதுர கிலோமீட்டர் நிலப்பரப்புள்ள வங்காள தேசம், உலகில் மிக மக்கள் நெருக்கடியுள்ள நாடுகளில் ஒன்றுகும்; உலகில் மிக ஏழ்மையான பகுதிகளில் அது ஒன்றுகும்.

வங்காள தேசத்தின் பொருளாதாரம் பெரும்பாலும் வேளாண்மையே ஆகும்; ஒரு சில தொழில்களே அங்குள்ளன; 1967-68 ல் அங்கு இருந்த ஆலைத் தொழிலாளர்கள் 2 இலட்சம் பேர்களே ஆவர்.

353 இலட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் 224 இலட்சம் ஏக்கர் அல்லது 63 சதவிகிதம் சாகுபடியில் உள்ளது; மற்றும் 53 இலட்சம் ஏக்கர் அல்லது 15 சதவிகிதம் காட்டு நிலங்களாக இருக்கின்றன; எஞ்சியது சாகுபடிக்கு இலாயக்கற்ற நிலங்கள்.

நெல்லும் சணலுமே முக்கியப் பயிர்களாகும்; 1969—70-ல் அரிசி உற்பத்தி 117 இலட்சம் டன்.

அரிசி முக்கிய உணவாக உள்ள போதிலும், சாதாரண மக்களுக்கு மீனும் முக்கிய உணவுப் பொருளாக இருக்கிறது; தெற்கில் வங்காளக் கடலும் -- நாடு முழுவதிலும் ஆறுகளும், குளங்களும் நிறைந்திருப்பதால் வங்காள தேசம் பெரிதும் மீன் உற்பத்திப் பகுதியாகும்.

உலகிலேயே சணல் உற்பத்தியில் மிக முக்கியமான நாடு வங்காள தேசம்; அடுத்தபடியாக இந்தியா உள்ளது.

1969—70-ல், வங்காள தேசத்தில் சணல் உற்பத்தி 70 இலட்சம் பேல்களாகும்; இந்தியாவைப் போல அல்லாமல் உள்நாட்டுத் தேவைக்குப்போக ஏற்றுமதிக்கு அதனிடம் கணிசமான உபரி உள்ளது.

1966-67-ல் அங்கு 11,000 ஆலைகள் இருந்தன. சணல் தொழில் மிக முக்கியமானது; 1966-67-ல் 29 சணல் மில்கள் இருந்தன; அந்த ஆண்டு சணல் துணி உற்பத்தி 4 இலட்சம் டன்; அதில் 80 சதவிகிதம் ஏற்றுமதி செய்யப்பட்டது.

பஞ்சாலைத் தொழில் அடுத்த முக்கியத் தொழிலாகும். 1966-67-ல் அந்த நாட்டிலிருந்து 22 பஞ்சாலைகள் 640 இலட்சம் மீட்டர் பருத்தித் துணிகளை உற்பத்திச் செய்தன.

1966—67-ல் அங்கு 26,500 டன் காகிதம் உற்பத்தியாகியது; அதுவும் சிறிதும் போதாது. மற்ற முக்கிய நுகர்ப் பொருட்கள் பிரச்சினையும் அதைப் போன்றதே.

750 இலட்சம் மக்களின் தேவைகளுக்கு சில்ஹெட்டில் ஒரே ஒரு சிமெண்டு ஆலை உள்ளது.

இவ்வாறு அந்த நாடு தொழில் துறையில் மிகவும் பின்தங்கியுள்ளது; இருந்தபோதிலும் போரில் அழியாது இருக்கும் தொழில்கள் தொழில் வளர்ச்சிக்குப் புதிய நாட்டுக்கு வகை செய்யும்.

22,000 சதுர கிலோமீட்டரில் உள்ள காடுகள் ஆண்டுக்கு 150 இலட்சம் கன அடி மரத்தை கொடுக்க முடியும்; மூங்கில் மற்றொரு முக்கிய காட்டுப் பொருளாகும்; ஆகவே காகிதம் -- அட்டைகள்-- பத்திரிகைக் காகிதம்--ரேயான் குழம்பு ஆகிய வன அடிப்படைத் தொழில்களைத் தொடங்க முடியும்.

அடுத்த சில வாரங்களில் ரூ. 600 கோடி தேவை

அயல் நாடுகளின் கடன் -- உதவிகளைப் பெறவும் வாய்ப்பு

வங்காள தேசத்தைப் பாகிஸ்தான் இராணுவத்தினர் பல்வேறு வகைகளில் நாசப்படுத்தியிருக்கிருர்கள்; வங்க தேச அரசின் முன்பாக உள்ள பணி மிகப் பெரிய ஒன்று.

முதலாவதாக, இந்தியாவுக்கு ஓடிவந்துள்ள ஒரு கோடி மக்கள் தாயகம் திரும்பவும் – மறுவாழ்வு பெறவும் அது நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

உள்நாட்டு நதி வழிகள் -- சாலைப் போக்குவரத்து ஆகியவை பெரும்பாலும் சேதமடைந்த நிலையில் உள்ளன; அவற்றைச் சீரமைக்க வேண்டும்.

நாடு முழுவதும் அரசாங்க இயந்திரத்தைச் சீராக அமைத்தாக வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளுக்காக அடுத்த சில வாரங்களில் வங்காள தேச அரசுக்கு ரூ. 600 கோடி தேவைப்படக்கூடும்.

குறைந்தபட்சம் முதல் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு வெளிநாட்டு உதவிகளும் -- கடன்களும் வங்காள தேசத்துக்குத் தேவைப்படலாம் என்பது சம்பந்தப்பட்ட அனைவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது; வங்காள தேசத்தின் பொருளாதாரம் சீராக இயங்கத் தொடங்குகின்ற வரையிலேனும் தேவைகள் நீடிக்கும்.

ஆனல் அந்நிய உதவிகளும் -- கடன்களும் கிடைப்பதில் சிரமம் இருக்காது என்று கருதப்படுகிறது.

இரஷ்யா, பிரிட்டன் உட்படச் சில நேச நாடுகள் வங்க தேசத்திற்கு உதவி அளிக்க விரும்பும் என்று கருதப்படுகிறது.

வங்காள தேசத்தில் சணல் -- தேயிலைத் தொழில்களில் பிரிட்டனுக்குக் கணிசமான அக்கறை உண்டு.

இது சம்பந்தமாக வங்காள தேசத் தலைவர்களுடன் இரஷ்யா ஏற்கனவே தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

புதிதாகத் தோன்றியுள்ள அண்டை நாட்டுக்கு உதவுவதில் இந்தியா கூடுமான அளவில் தன் பங்கைச் செய்யும்.

'கண்கூடாகத் தோன்றும் உண்மையை எவரும் புறக்கணித்துவிட முடியாது'

'படை பலத்துடன் பாகிஸ்தான் வங்காள தேசத்திற்குள் நுழைய முயற்சித்தால் சமாதானம்--பாதுகாப்புக்கு ஏற்பட்ட அச்சுறுத்தலாகவே அது கருதப்படும்'

ஐ.நா. பாதுகாப்பு அவையில் சுவரண்சிங் திட்டவட்ட அறிவிப்பு

ஐ. நா., டிச. 23—

"வங்காள தேசத்தில் பாகிஸ்தான் படைகளை வைத்திருக்க பாகிஸ்தானுக்கு இனிமேல் எவ்வித உரிமையும் கிடையாது! அப்படி வங்காள தேசத்தில் படை பலத்துடன் மீண்டும் நுழைவதற்குப் பாகிஸ்தான் முயற்சி எதையாவது செய்தால், அது சமாதானத்துக்கும் – பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி, அமைதிக்கு மீண்டும் அபாயத்தை ஏற்படுத்தும்; கண்கூடாகப் புலப்படும் இந்த உண்மை நிலையை சர்வதேச சமுதாயம் புறக்கணிக்க முடியாது.

"எந்த அளவுக்குச் சுதந்தர வங்க தேசம் உலக நாடுகளால் அங்கீகரிக்கப்படுகிறதோ அவ்வளவு விரைவில் இந்திய இராணுவம், வங்க தேசத்தைவிட்டு வெளியேறிவிடும்"

என்று, ஐ. நா. பாதுகாப்புச் சபையில், இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் சுவரண் சிங், சுட்டிக்காட்டி எடுத்துரைத்தார்.

"இந்தியத் துணைக் கண்டத்தில், எல்லாப் போராட்டப் பகுதிகளிலும் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு – நிலையான போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும்" என்ற தீர்மானம் ஐ நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டது.

13 உறுப்பினர்கள், இத்தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்கு அளித்தனர்; எதிர்த்து யாரும் வாக்கு அளிக்கவில்லை; இரஷ்யாவும் – போலந்தும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

தீர்மானத்தையொட்டி சுவரண் சிங் மேலும் பேசுகையில், 'துணைக் கண்டத்திலுள்ள வங்காள தேசம் – பாகிஸ்தான் – இந்தியா ஆகிய மூன்று நாடுகளும் ஒத்துழைத்து – சமாதான சகாப்தத்தைக் கொண்டு வரும்' என நம்புகிறேன்' என்றார்.

"இப்பிரச்சினையின் மூலகாரணங்களுக்குத் தீர்வு காணாவிடில் -- மனித உரிமைகளும் -- அடிப்படைச் சுதந்தரங்களும் மதிக்கப்படாவிடில் -- நிரந்தரச் சமாதானம் இருக்க முடியாது" என்றார்.

இந்தியாமீது ஒரு நாடு அவதூறாகப் பேசியதை அவர் குறிப்பிட்டு, 'அதற்குப் பதில் சொல்வது விரும்பத்தக்கதல்ல' என்றார்.

வங்காள தேசத்தில் 10 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டதையும் -- ஒரு கோடி மக்கள் வெளியேற நேர்ந்ததையும் பற்றி தீர்மானத்தில் குறிப்பிடாததற்கு வருத்தம் தெரிவித்தார்.

வங்காள தேசம் இருப்பதையும் -- வங்காள தேச அரசு ஏற்பட்டிருப்பதையும் புறக்கணிக்க முடியாது என்பதை எடுத்துக்காட்டி, 'வங்காள தேசப் பிரதிநிதிகளை இங்கு வரவழைத்து உண்மை நிலையை அறிந்துகொள்வதற்கு சபை முன்வராதது துர்ப்பாக்கிய வசமாகும்' என்றார்.

அவசியமின்றி நாங்கள் அங்கிருக்கமாட்டோம்

இந்தியப் படைகள் வங்காள தேசத்தில் இருக்கவேண்டியதன் அவசியத்தை சுவரண் சிங் விளக்குகையில் குறிப்பிட்டதாவது :—

"வங்காள தேசம் சுதந்தரம் அடைந்துவிட்டது; அங்குள்ள பாகிஸ்தான் படைகள் சரணடைந்துவிட்டன; ஆகவே, அவர்களைக் கிழக்கு முனையிலிருந்து வெளியேற்றுவதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும்; இந்தப் படைகள் இந்தியாவின் பாதுகாப்பில் இருக்கின்றன; ஜெனீவா ஒப்பந்தப்படி அவர்களை நடத்துவதாக உறுதியளித்திருக்கிறோம்; ஆகவே, வங்காள தேசத்தில் இந்தியப் படைகள் இருந்துவருவது அவசியமாகும்.

எங்களிடம் சரண் புகுந்த பாகிஸ்தானியப் படைகளைப் பாதுகாப்பதற்காகவும் -- அவர்கள் மீது பழிவாங்குவதுபோன்ற செயல்களைத் தடுக்கவும் இந்தியப் படைகள் அங்கு இருந்தாக வேண்டியது அவசியமாகும்; இப்பணிகள் முடிந்ததும், இந்தியப் படைகள் வெளியேறிவிடும்.

வங்காளதேச அரசு ஏற்கனவே அங்கு சிவில் நிர்வாகத்தை அமைத்துள்ளது; ஆகவே, நாங்கள் அங்கிருக்கவேண்டிய தேவையிலிருந்தும் எங்களைக் கூடிய விரைவில் விடுவிக்கும் என்று நம்புகிறோம்; அவசியத்துக்கும் அதிகமாக நாங்கள் அங்கு இருக்க விரும்பவில்லை."

பிரச்சினைக்குத் தீர்வு காண ஒத்துழைப்போம்

மேற்கு முனையைப் பற்றிப் பேசுகையில், அமைச்சர் சுவரண் சிங் குறிப்பிட்டதாவது :—

'இப்போதைய போரின் விளைவாகப் பாகிஸ்தானின் சில பகுதிகள் இந்தியப்படைகளின் வசம் இருக்கின்றன; அதைவிட சிறிய நிலப்பரப்பு இந்தியாவில் பாகிஸ்தான்வசம் இருக்கிறது.

வெளியேறும் கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்; பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைமூலம் விரைவில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புகிறோம்; இத்துறையில் பாகிஸ்தானின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

சீனப் பிரதிநிதி புலம்பல்--பிதற்றல்

வாக்கெடுப்பு நடைபெற்று முடிந்தவுடன், செஞ்சீனப் பிரதிநிதி பேசுகையில் கூறியதாவது :—

"தீர்மானத்தை ஆதரித்து நாங்கள் வாக்கு அளித்திருந்தாலும் இதில் எங்களுக்குச் சிறிதளவும் மனநிறைவே இல்லை; ஏனெனில், நியாயம் -- அநியாயம் -- ஆக்கிரமித்தவர் -- அதற்கும் பலியானவர் என்ற வேறுபாடு தீர்மானத்தில் காணப்படவில்லை.

சோவியத் இரஷ்யாவின் ஆதரவுடன் பாகிஸ்தானுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆக்கிரமிப்பு தீர்மானத்தில் கண்டிக்கப்படவில்லை.

சென்ற இரு வாரங்களாகப் பாதுகாப்புச் சபை செயலற்றுக் கிடந்தது; சோஷலிஸ்டு ஏகாதிபத்தியவாதிகளும்-- நாடு பிடிக்கும் ஆசை கொண்ட இந்தியர்களும், பட்டப் பகலில் இன்னொரு நாட்டைத் தாங்கள் துண்டாட முடியும் என்பதைப் பற்றி அளவு கடந்த மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள்; ஆனால் டாக்காவின் வீழ்ச்சி அவர்களுடைய தோல்விக்குத் துவக்கக் கட்டமாக இருக்கும்.

பாகிஸ்தான் மக்கள், தங்களுடைய வீரப் போராட்டத்தை நிறுத்த மாட்டார்கள்; சோஷலிஸ்டு ஏகாதிபத்தியவாதிகளும் -- நாடாசை பிடித்த இந்தியர்களும், தங்களை ஆட்டு மந்தைகளைப் போல் விரட்டுவதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்; இந்த இரு 'கோஷ்டி'யினரும் தங்களது ஆக்கிரமிப்பின் பலன்களை அனுபவிப்பார்கள்."

பாகிஸ்தான் பிரதிநிதி புலம்பல்

'இந்தத் தீர்மானம் பலவீனமாக இருக்கிறது' என்று கூறிவிட்டுப் பாகிஸ்தான் பிரதிநிதி ஆகா ஷாகி பேசியதாவது :—

"இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள நிலைமையைப் பற்றிப் பாதுகாப்பு சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டது; ஆனால், ஐ. நா. சாசனத்தின் அடிப்படையில் இந்தப் பிரச்சினையைத் துவக்கத்திலேயே தீர்க்கப் பாதுகாப்புச் சபை தவறிவிட்டது என்ற பெரிய உண்மை இதனால் மறைந்துவிடவில்லை.

பாகிஸ்தான் பகிரங்கமான ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டது; ஆனால், அதைத் தடுக்கப் பாதுகாப்புச் சபை தவறிவிட்டது; சமாதானம் குலைக்கப்பட்டபோதும் சபை அதைத் தடுக்கத் தவறிவிட்டது; துணைக்கண்டம் முழுவதையும் போர்த் தீ சூழ்ந்துகொண்டது; நதக தீயை அணைக்கவும் சபை தவறிவிட்டது; எவ்வளவோ உயிர்கள் மாய்க்கப்பட்டன; அந்த உயிர்களைக் காப்பாற்றவும் சபை ஒன்றும் செய்யவில்லை."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அமுதில் அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-1) [illegible]

'சுதந்தரத்தைப் பேணிக்காக்கக் குருதி சிந்தத் தயார்'

'எந்த முயற்சியையும் எதிர்த்து முறியடிப்போம்'

வங்க தேசத் தற்காலிகக் குடியரசுத் தலைவர் உரிமை முழக்கம்

டாக்கா, டிச. 23—

வங்க தேசத்தின் தற்காலிகக் குடியரசுத் தலைவர் சையத் நஸ்ருல் இஸ்லாம் -- தலைமையமைச்சர் தாசுதீன் அகமது -- மற்றும் அமைச்சர்கள், முஜிப் நகரிலிருந்து விமானம்மூலம் புறப்பட்டு டாக்கா சேர்ந்தனர்.

சுதந்தர வங்க தேசத்தின் தலைநகரான டாக்கா விமான நிலையத்தில் அவர்கள் வந்திறங்கியதும், இந்தியா இராணுவத்தினரும் -- முக்தி வாகினி படையினரும் அணிவகுப்பு மரியாதை அளித்தனர்.

முதல் பணியாக அவர்கள் அனைவரும் ஷேக் முஜிபுர் ரகிமான் இல்லத்திற்குச் சென்று -- அவரது துணைவியாருக்கு வணக்கம் செலுத்தினர்.

விமான நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் நின்று பேசுகையில், தற்காலிகக் குடியரசுத் தலைவர் நஸ்ருல் இஸ்லாம் கூறியதாவது :—

'வங்க தேசத்தின் விடுதலையை நசுக்கப் பாகிஸ்தானும் – அதன் ஆதரவு நாடுகளும் மேற்கொள்ளக்கூடிய எந்த முயற்சியையும் எதிர்த்து முறியடிப்போம்.

"நாடு சுதந்தரம் பெற ஆயிரக்கணக்கான மக்கள் இரத்தம் சிந்தியுள்ளனர்; சுதந்தரத்தைப் பேணிக் காக்க இன்னும் ஆயிரக்கணக்கான மக்கள் இரத்தம் சிந்துவதற்குத் தயாராக உள்ளனர்."

சீன--அமெரிக்க ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

போர் முனையில் எதிரிகள் கைவிட்டு ஓடினர்

ஜலந்தர், டிச. 23—

தேரா பாபா நானக் பகுதியில், கடந்த 5-ந் தேதியன்று எதிரிகள்மீது இந்தியப் படைகள் திடீர்த் தாக்குதல் நடத்தியதில், ஏராளமான சீன -- அமெரிக்க ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் விட்டுவிட்டு எதிரிகள் ஓட்டம் பிடித்திருக்கின்றனர்.

மூன்று லாரிகள், ஏராளமான ஆயுதங்கள் இதுவரையில் இந்தியாவுக்குக் கொண்டுசேர்ந்துவிட்டன.

இன்னும் ஏராளமான ஆயுதங்கள் கொண்டுசேரப்படவிருக்கின்றன.

இந்திய இராணுவம் அங்கு பெற்ற வெற்றிக்குப் பரிசாக இது கருதப்படுகிறது.

வங்காள தேசத்துக்குப் புதிய நாணயங்கள்

'விரைவில் தயாராகும்' எனத் தகவல்

முஜிப் நகர், டிச. 23—

"வங்காள தேசத்தில் முன்பு பாகிஸ்தானியர்கள் இருந்தபோது, அங்கு இருந்த பாகிஸ்தான ரூபாய் நோட்டுகளை தீ வைத்துக் கொளுத்திவிட்டார்கள்; இதனால், வங்காள தேசத்துக்கு என்று தனியாக நாணயங்களும் -- ரூபாய் நோட்டுகளும் விரைவில் அச்சிடப்படும்" என்று வங்காள தேச அதிகாரி ஒருவர் கூறினார்.

டாக்கா சணல் ஆலைகள்--வேலைகளைத் தொடங்கின

புதுடில்லி, டிச. 23—

டாக்கா பகுதியிலுள்ள சணல் ஆலைகளில் வழக்கம்போல் வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டனவாம்.

அப்பகுதியில், சமூக நிலைமை திரும்பி வருகிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்ட தி.மு.கழகக்குழுக் கூட்ட அறிவிப்பு

'தஞ்சை மாவட்ட தி.மு.க. குழுக் கூட்டம், 2-1-72 காலை 9 மணிக்கு திருத்துறைப்பூண்டி பெரியகோயில் திருமண மண்டபத்தில் நடைபெறும்; அதுபோது, சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி--ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, மாவட்டச் செயலாளர் மன்னை ப. நாராயணசாமி எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

24--12--71

காரைக்கால்

காட்டுப் பாதுகாப்பு - அனைத்துக் கட்சிக் குழுச் சார்பில் மாலை 6 மணிக்கு முருகையனார் திடலில்; தலைவர் : கே. காந்தி; பேசுவோர் : தமிழக அமைச்சர் க. இராசாராம், புதுவை முதல்வர் எம். ஓ எச். பாரூக், அமைச்சர்கள் இராமசாமி, வி. சுப்பையா, இராமச்சந்திரன், எஸ் ஆறுமுகம், பி. சண்முகம் எம்.எல்.ஏ., ஜெம்புலிங்கம் எம்.எல்.ஏ., மற்றும் பலர்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன்

நிகழ்ச்சிகள்

டிச. 24 காலை 10-மணி : தெள்ளார் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 11-மணி : தெள்ளார் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு; 11 30 மணி : கொடியாலம் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டித் திறப்பு; நண்பகல் 12-மணி : ஜப்திகாரணி உயர் துவக்கப் பள்ளித் திறப்பு; மாலை 3-மணி : வந்தவாசி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 4-மணி : வந்தவாசி பேரூராட்சிமன்ற வரவேற்பு; 5-மணி : மருதநாடு அரசினர் உயர்நிலைப் பள்ளி அடிக்கல் நாட்டு விழா; 6-மணி : கல்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பாடசாலைத் திறப்பு.

டிச. 25 மாலை 6-30 மணி : திருச்சி—இளநிலைப் பொறியாளர் சங்க 'பொறியாளர் நாள் விழா'வில் கலந்துகொள்ளல்.

டிச. 26 மாலை 5-மணி : காஞ்சிபுரம்—சுதந்தர வங்க தேச -- விடுதலை நாள் -- இந்தியப் பாதுகாப்பு நாள் விழாவில் கலந்துகொள்ளல்;